**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.248/2025
Sessions)

( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | கணேசன் | -- | |
| Father's Name | ராமசாமி | Calling | கூலி |
| Village | வைத்தியலிங்கபுரம் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா வைத்தியலிங்கபுரம், பிள்ளையார் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு சுமார் 5 ஆண்டுகளாக வாடகைக்கு ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வந்தேன். 08.07.2023ம் தேதி இரவு 08.00 மணியளவில் வைத்தியலிங்காபுரத்திலிருந்து மடவார்வளாகம் சிவன் கோவில் செல்வதற்காக ஆட்டோவில் நான் சென்றுவிட்டு திரும்ப வந்துக்கொண்டிருந்தபோது விஷ்ணு பழக்கடைக்கு வடக்கில் எனது சித்தப்பா மகன் குருநாதன் ரோட்டின் வடபுறம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றுக்கொண்டிருந்தார். அப்போது இரவு 08.45 மணி இருக்கும். அப்போது குருநாதனுக்கு எதிர்த்தார்போல் TN 33 AM 9734 என்ற பதிவெண்கொண்ட ஈச்சர் வண்டி டாட்டா ஏஸ் வண்டியை ஓவர்டேக் செய்து அதிவேகமாக வந்து குருநாதன் மீது மோதிவிட்டது. இரவு நேரமாக இருந்ததால் மேற்படி ஈச்சர் வண்டியை ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. குருநாதனுக்கு வலது காலிலும், மண்டையிலும் மற்றும் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் அவ்வழியாக வந்த ஒரு ஆட்டோவில் காயப்பட்ட குருநாதனை ஏற்றிக்கொண்டு நானும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். பின்னர் குருநாதனின் தம்பி சாட்சி சோலைமுருகனுக்கும் போன் மூலமாக தகவல் தெரிவித்தேன். அவரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டார். பின்னர் காயப்பட்ட குருநாதனை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**